




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








திங்கள் ❖ மே. 30, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 235 ❖ ரூ.10


## சென்னையில் மாநகராட்சிக்கு வரி செலுத்தாதவர்களுக்கு

# ஆபத்து

## வரி செலுத்துவதில் அலட்சியம் காட்டினால் ஜப்தி நடவடிக்கை: சென்னை மாநகராட்சி எச்சரிக்கை



**சென்னை , மே.30–**

**சென்னையில் நீண்ட நாட்களாக சொத்து வரி செலுத்தாத வணிக நிறுவனங்கள் மற்றும் ஓட்டல்கள் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகராட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.**

சென்னை மாநகராட்சியின் வரி வருவாயில், சொத்து வரி முக்கிய வருவாய் ஆக உள்ளது. இந்நிலையில், அதிக வரி பாக்கி உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சென்னை மாநகராட்சி முடிவு செய்தது.

இதன்படி சமீப காலமாக அதிக சொத்து வரி நிலுவையில் உள்ள கட்டிடங்களுக்கு சீல் வைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதை மேலும் தொடர ரூ.10 லட்சத்திற்கு அதிகமாக சொத்து வரி பாக்கி உள்ளவர்களின் பட்டியலை சென்னை மாநகராட்சி தயார் செய்தது.

இந்த பட்டியல் படி நீண்ட நாட்களாக வரி செலுத்த தவறும் சொத்து உரிமையாளர்களின் சொத்தினை சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டத்தின்படி ஜப்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்படி நீண்ட நாட்களாக சொத்து வரி செலுத்தாத 3 திருமண மண்டபங்கள், 6 ஹோட்டல்கள், 1 திரையரங்கம், 1 மருத்துவமனை, 4 வணிக வளாகங்கள் மற்றும் 107 வணிக அங்காடிகளுக்கு சீல் வைக்கப்பட்டும், 63 பெரிய நிறுவனங்களின் கட்டடங்களுக்கு முன்பாக ஜப்தி அறிவிப்பு வைக்கப்பட்டும் நிலுவை வரியினை உடனடியாக செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் காரணமாக சொத்து வரியினை நீண்ட நாட்களாக செலுத்தாத நிறுவனங்கள் தங்களது சொத்து வரி நிலுவையினை செலுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக கடந்த 15 நாட்களின் ரூ.40 கோடி சொத்து வரி வசூலிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 2022 முதல் நடப்பு ஆண்டில் இதுவரை ரூ. 220.64 கோடி சொத்து வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

## போலீஸ் எஸ்ஐகளுக்கு 2 வாரத்துக்கு ஒரு முறை விடுமுறை: டிஜிபி சைலேந்திரபாபு தகவல்



வேலூர் , மே.30–

தமிழக காவல் துறையில், எஸ்ஐ மற்றும் எஸ்எஸ்ஐக்களுக்கு 2 வாரத்துக்கு ஒரு முறை விடுமுறை அளிப்பது குறித்த அரசாணை விரைவில் வெளியிடப்படும் என தமிழக டிஜிபி சைலேந்திரபாபு தெரிவித்தார்.

வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வேலூர் சரக காவல் துறையினரின் ஆய்வுக்கூட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், கலந்து கொள்ள தமிழக டிஜிபி சைலேந்திரபாபு இன்று பிற்பகல் வேலூர் வந்தார். அவரை வேலூர் சரக டிஐஜி ஆனி விஜயா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ராஜேஷ்கண்ணன் (வேலூர்), பாலகிருஷ்ணன் (திருப்பத்தூர்). தீபாசத்யன் (ராணிப்பேட்டை), பவன்குமார் (தி. மலை) ஆகியோர் வரவேற்றனர். வேலூர் மாவட்ட காவல் துறை சார்பில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட டிஜிபி சைலேந்திரபாபு காவல் துறையினரின் கராத்தே பயிற்சியை பார்வையிட்டார். பிறகு, நக்சலைட் சிறப்பு பிரிவினர்களின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து விளக்கும் புகைப்பட கண்காட்சி மற்றும் வேலூர் சரக காவல் துறையினரின் சிறப்பான செயல்பாடுகளை விளக்கும் புகைப்பட கண்காட்சியை அவர் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, காவல் துறையினர் தங்களது உடல் நலத்தை சீராக வைத்துக்கொள்ள வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு உடற்பயிற்சி உபகரணங்களை டிஜிபி சைலேந்திரபாபு அந்தந்த மாவட்ட எஸ்பிக்களிடம் வழங்கினார். இதையடுத்து, பல்வேறு வழக்குகளில் காணாமல் போன ரூ.12 லட்சம் மதிப்பிலான 120 கைபேசிகள் மீட்கப்பட்டு அவை உரிமையாளர்களிடம் டிஜிபி சைலேந்திரபாபு வழங்கினார்.

பிறகு, வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் காவல் துறை அதிகாரிகளுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. முன்னதாக வேலூர் மாவட்டத்தில் கடந்த 1 மாதத்தில் 2,450 கிலோ எடையுள்ள போதை பொருட்களை பறிமுதல் செய்த தனிப்படையினர், கடந்த ஒரு மாதத்தில் 70 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்த தனிப்படையினர், குடியாத்தம் கெங்கையம்மன் கோயில் திருவிழாவில் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடு செய்த தனிப்படையினர், திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த நெக்குந்தி சுங்கச்சாவடி அருகே கடந்த சில நாட்களுக்கு முன்பு திருடுப்போன லாரி மற்றும் அதிலிருந்த ரூ.29 லட்சம் மதிப்பிலான பொருட்களை 6 மணி நேரத்தில் மீட்டு குற்றவாளியை கைது செய்த தனிப்படையினர், ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தில் நடந்த இரட்டை கொலை வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளை விரைவாக கைது செய்த தனிப்படையினருக்கு தமிழக டிஜிபி சைலேந்திரபாபு பாராட்டு தெரிவித்து சான்றிதழ் வழங்கினார்.

## பாதுகாப்பை திரும்ப பெற்ற அரசு: பிரபல பாடகர் சித்து மூஸ்வலா சுட்டுக்கொலை!



புதுடெல்லி , மே.30–

புதுடெல்லி, பஞ்சாப் பாடகரும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவருமான சித்து மூஸ்வாலா நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார். மன்சா மாவட்டத்தில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கியால் சுட்டதில் சித்து மூஸ்வாலா உயிரிழந்தார். மேலும் அவரது நண்பர்கள் 2 பேர் காயம் அடைந்தனர்.

சித்து மூஸ்வாலா தனது இரண்டு நண்பர்களுடன் தனது கிராமத்திற்கு செல்லும் வழியில் இந்த கொலை நிகழ்ந்துள்ளது. கொலை நடந்த இடத்தில் மூஸ்வாலா ரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார். அவர் சென்ற கார் முழுவதும் துப்பாக்கி குண்டுகள் சிதறி கிடந்துள்ளது. காயமடைந்த அவரை மருத்துவனைக்கு அழைத்து சென்ற நிலையில், மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாக பல்வேறு அசத்தலான பாடலை வழங்கி பஞ்சாப் மக்களின் மனதில் இடம் பிடித்தவர் சித்து மூஸ்வாலா (28), இவர் கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். தொடர்ந்து, 2022 பஞ்சாப் சட்டமன்ற தேர்தலில் அவர் மானசா தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டார். எனினும், ஆம் ஆத்மி வேட்பாளர் விஜய் சிங்கலாவிடம் அவர் தோல்வியை தழுவினார்.

இந்நிலையில், பஞ்சாப் காங்கிரஸ் தலைவர் சரண் சிங்சப்ரா, சித்து மூஸ்வாலாவுக்கு எதன் அடிப்படையில் பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்பட்டது என்பதை மாநில அரசும், முதல்வரும் தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பஞ்சாபில் ஆளும் ஆம் ஆத்மி அரசு நேற்று மூஸ்வாலா உள்பட 424 பேருக்கு அளிக்கப்பட்டு வந்த பாதுகாப்பை திரும்பப் பெற்று நடவடிக்கை எடுத்தது. விஐபி கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டு வரும்போக்கு அம்மாநில முதல்வர் பகவந்த் மான் விஐபி பாதுகாப்பை திரும்ப பெற்றார். இதற்கு மறுநாளே சித்து மூஸ்வாலா கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஜெர்மனி கண்காட்சியில் தமிழக அரங்கு அமைப்பு தொழில் முதலீடுகளை ஈர்க்க தீவிரம்

சென்னை, மே.30–

வெளிநாடுகளில் இருந்து தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு சர்வதேச கண்காட்சிகளில் தமிழகத்தின் சார்பில் அரங்குகள் அமைக்கப்படுகிறது.

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு சர்வதேச கண்காட்சிகளில் தமிழகத்தின் சார்பில் அரங்குகள் அமைக்கப்படுகிறது. அந்த அரங்குகளில் தமிழகத்தில் தொழில் தொடங்க எந்தெந்த வகைகளில் எல்லாம் தேவையான சாத்திய கூறுகள் உள்ளன என்பது பற்றி தெள்ளத்தெளிவாக விளக்கப்படுகிறது.

அந்த வகையில் துபாய், அபுதாபி, ஜெர்மனியில் நடந்த தொழில் கண்காட்சியில் தமிழக அரசு சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டன. அந்த அரங்குகள் மூலம் கணிசமான அளவுக்கு தமிழகத்துக்கு தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் துபாய்க்கு நேரில் சென்று தொழில் முதலீடுகளை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஜெர்மனி நாட்டில் இன்று 'ஹனோவர் மெசி–2022' என்ற தலைப்பில் சர்வதேச தொழில் கண்காட்சி நடைபெற உள்ளது. இந்த கண்காட்சி இன்று (திங்கட்கிழமை) முதல் ஜூன் மாதம் 2–ந்தேதி வரை 4 நாட்களுக்கு நடைபெற உள்ளது. இதில் பல்வேறு நாடுகளும் தங்களது அரங்குகளை அமைத்துள்ளன.

ஜெர்மனி தொழில் கண்காட்சியில் தமிழக அரசு சார்பிலும் சிறப்பு அரங்கு அமைக்கப்பட்டு உள்ளது. தமிழகத்தில் தொழில் தொடங்க உள்ள வாய்ப்புகள் பற்றி அந்த அரங்கில் தெளிவுப்படுத்தப்பட்டு உள்ளது. சர்வதேச தொழில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் இந்த அரங்கு அமைந்துள்ளது.

ஆற்றல், உற்பத்தி, நெட்வொர்க்கிங், லாஜிஸ்டிக் துறைகளில் தொழில் முதலீட்டை ஈர்க்கும் வகையில் இந்த அரங்கு அமைந்து இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழக அரசு சார்பில் தொழில் வழிகாட்டு நிறுவனத்தில் அதிகாரிகள் மற்றும் தொழில்துறை உயர் அதிகாரிகள் இந்த கண்காட்சியில் பங்கேற்றனர்.

## ஈரோட்டில் வீட்டின் பூட்டை உடைத்து கார், நகை, பணம் கொள்ளை: போலீசார் விசாரணை



ஈரோடு, மே.30–

குடும்பத்துடன் சுற்றுலா சென்றிருந்த நிலையில் வீட்டின் பூட்டை உடைத்து கார், நகை, பணம் கொள்ளை போனது தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்த புஞ்சை புளியம்பட்டி, மாதம் பாளையம் ஊராட்சி கணபதி நகர் பகுதியைச் சேர்ந்தவர் இளங்கோவன் (50) கம்ப்யூட்டர் டிசைனரான இவர் தனது மனைவி நித்யா மற்றும் இரண்டு குழந்தைகளுடன் அதே பகுதியில் வசித்து வருகிறார். இந்த நிலையில் கோடை விடுமுறையை கொண்டாட தனது குடும்பத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை கேரளாவுக்கு சுற்றுலா சென்ற அவர் வீட்டை பூட்டிவிட்டு சாவியை அருகே வசிக்கும் நண்பரிடம் கொடுத்து விட்டுச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்று காலை இளங்கோவன் வீட்டில் வளர்க்கும் மீன்களுக்கு உணவு வழங்குவதற்காக அவரது நண்பர் கந்தன் சென்றுள்ளார். அப்போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு காம்பவுண்ட்டுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹோண்டா ஐ 10 கார் காணாமல் போனது கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும் வீட்டின் கதவும் உடைக்கப்பட்டு இருந்ததை கண்டு புஞ்சைபுளியம்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். இதையடுத்து அங்கு வந்த போலீசார் ஆய்வு செய்தபோது வீட்டிற்குள் வைக்கப்பட்டிருந்த 12 சவரன் தங்க நகை, பத்தாயிரம் பணம் மற்றும் ஹோண்டா ஐ10 கார் திருடு போனது தெரியவந்தது. கொள்ளை குறித்து சுற்றுலா சென்றுள்ள வீட்டின் உரிமையாளர் இளங்கோவனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து புஞ்சைபுளியம்பட்டி போலீசார் விசாரித்து வருகின்றனர். குடும்பத்துடன் சுற்றுலா சென்றிருந்த நிலையில் வீட்டின் பூட்டை உடைத்து பணம், நகை மற்றும் காரை மர்ம நபர்கள் திருடி சென்ற சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நேபாளத்தில் மாயமான விமானம் கண்டுபிடிப்பு




காத்மாண்டு, மே.30–

நேபாளத்தில் 22 நபர்களுடன் சென்ற தாரா ஏர் 9 என்ஏஇடி விமானத்தின் தகவல் தொடர்பு நேற்று காலை துண்டிக்கப்பட்டு மாயமானது.

நேபாளத்தில் இருந்து காலை 9.55 மணிக்கு பொக்காராவில் இருந்து ஜோம்சோமுக்கு புறப்பட்டுச் சென்ற விமானம் மாயமானது. அந்த

விமானத்தில் 4 இந்தியர்கள், 3 ஜப்பானியர்கள் உள்பட மொத்தம் 22 பேர் பயணம் செய்துள்ளனர். காணாமல் போன விமானத்தைத் தேடும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், மாயமான விமானம் நேபாளத்தின் மஸ்டாங் அருகே கோவாங் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

விமானத்தின் முழுமையான நிலை குறித்து இன்னும் கண்டறியப்படவில்லை என திரிபுவன் சர்வதேச விமான நிலைய தலைவர் தெரிவித்துள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்








| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,775 | Rs.5,174 |


## வரலாற்றில் இன்று



1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.



உடல்நலக் குறைவு காரணமாக சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நடிகரும், இயக்குனருமான டி.ராஜேந்தர் உடல்நலம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று நலம் விசாரித்தார் .

# சென்னையில் பாதுகாப்பான நகரம் குறித்த பேரணியில் சக பெண்களுடன் சேர்ந்து மேயர் பிரியா சைக்கிள் பயணம்

சென்னை மே.30-

பாதுகாப்பான நகரம் குறித்த பேரணியில் சக பெண்களுடன் சேர்ந்து மேயர் பிரியா சைக்கிள் பயணம் மேற்கொண்டார்.



சென்னையில் பாலின வேறுபாடு இல்லாமல் பெண்கள் இயல்பாக பொது இடங்களை உபயோகப் படுத்துவதற்காகவும், பெண்களின் பாதுகாப்பு எல்லோருடைய பொறுப்பு என்பதை உணர்த்தும் வகையிலும், 'சிங்கார சென்னை 2.0' வீதி விழாவின் ஒரு பகுதியாக, பாதுகாப்பான சென்னை என்ற கருத்தை வலியுறுத்தி பெண்களுக்கான இரவு நேர சைக்கிள் ஓட்டும் பேரணி நடைபெற்றது.

சென்னை இந்திரா நகர் பறக்கும் ரயில் நிலைய நுழைவாயில் அருகில் நடைபெற்ற பேரணியை பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த சைக்கிள் பேரணியில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா கலந்து கொண்டு, சக பெண்களுடன் சேர்ந்து சைக்கிள் பயணம் மேற்கொண்டார். இந்த நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி துணை கமிஷனர்கள், பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை அம்பத்தூரில் இளைஞர் கடத்திச் சென்று வெட்டிக்கொலை

சென்னை மே.30-

அம்பத்தூரில் இளைஞர் ஒருவரை இரு சக்கர வாகனத்தில் கடத்தி சென்று வெட்டி படுகொலை செய்த 9 பேரை காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.



அம்பத்தூர் சண்முகபுரம், அன்னை இந்திரா நகர், கோரை தெருவை சேர்ந்தவர் உதயகுமார் (25). இவர் அம்பத்தூர் காவல் நிலைய பதிவேட்டில் ரௌடி பட்டியலில் இருக்கிறார். இவரது மனைவி சங்கீதா (21). இவர்களுக்கு திருமணமாகி 2 ஆண்டாகிறது. 7 மாதத்தில் கவின் என்ற ஆண் குழந்தை உள்ளது. உதயகுமார் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு திருவள்ளூர் அருகே வேப்பம்பட்டு, பாரதியார் நகரில் குடும்பத்துடன் தங்கி இருந்து வந்தார். இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் உதயகுமார் தனது தாய் லதாவை பார்க்க சண்முகபுரம் சென்றிருக்கிறார். அப்போது அவரை சிலர் பைக்கில் கடத்திச் சென்றதாக சொல்லப்படுகிறது. இவ்விவரத்தை அவரது நண்பர் அஜித் என்பவர் லதாவிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அன்று இரவு லதா அம்பத்தூர் காவல் நிலையத்தில் சென்று புகார் அளித்துள்ளார். காவல் ஆய்வாளர் ராமசாமி தலைமையில் காவல்துறையினர் அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களின் மூலமாக தீவிர விசாரணை நடத்தியதில் உதயகுமாரை சிலர் கடத்திச் சென்று அதே பகுதி சிவப்பிரகாசம் நகர், தாமரைகுளம் அருகே முட்புதரில் சரமாரியாக வெட்டிக் கொலை செய்து இருந்தது தெரியவந்தது.

பின்னர் காவல்துறையினர் சடலத்தை கைப்பற்றி உடற்கூறு பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர். அதில், உதயகுமாரின் நண்பர் ஜீவா (26) என்பவரை, அதே பகுதியைச் சேர்ந்த மோசஸ், லாரன்ஸ், எலியா சாமுவேல் ஆகியோர் கடந்த மாதம் 18ஆம் தேதி தாக்கியுள்ளனர். இதனை அறிந்த உதயகுமார் மோசஸ் வீட்டுக்குச் சென்று அவரது தாயார் ராஜலட்சுமியிடம் தட்டிக் கேட்டு தகராறு செய்துள்ளார். இதனையடுத்து விரோதம் காரணமாக மோசஸ் தனது நண்பர்களுடன் சேர்ந்து உதயகுமாரை கடத்திச் சென்று சரமாரியாக வெட்டிக்கொலை செய்தது தெரியவந்தது.

இதையடுத்து தலைமறைவாக இருந்த சண்முகபுரம் பகுதியைச் சேர்ந்த அப்புன் என்ற பூவராகவன்(36), சரண் (20), ராமமூர்த்தி (22), மாரிஸ் (20), பிராங்கிளின்(23), முகுந்தன் (20), எலியா சாமுவேல் (20) மாணிக்கம் (24), வினோத்குமார் (40) ஆகிய 9 பேர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். தொடர்ந்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

மேலும் இந்த கொலை வழக்கு தொடர்பாக மோசஸ், எலியாஸ், லாரன்ஸ் ஆகிய மூவரை காவல்துறையினர் தேடி வருகின்றனர். முன்விரோதம் காரணமாக இளைஞர் ஒருவரை கொலை செய்த சம்பவம் அம்பத்தூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




### கடந்த ஆண்டில் ரூ.6 கோடி மதிப்பிலான

# 102 டன் போதை பொருட்கள் பறிமுதல் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை மே.30-

தமிழகத்தில் போதை பொருட்கள் இருக்க கூடாது என்பதே முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் எண்ணம் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



நாடுமுழுவதும் ஆண்டுதோறும் மே 31-ந்தேதி சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இந்நிலையில் சென்னையில் கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற நடைபயண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் மா சுப்ரமணியன், "உலக புகையிலை நாளை முன்னிட்டு, போதை ஒழிப்பிற்கு விழிப்புணர்வு பேரணி தொடங்கப்பட்டுள்ளது.

2013 மே முதல் குட்கா பான் மசாலா உள்ளிட்ட பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டது குறிப்பிடதக்கது. இந்நிலையில் கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் ரூ.6.8 கோடி மதிப்பில்102 டன் போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 36 அரசு கல்லூரி மருத்துவமனைகளில் பிரத்யேக மறுவாழ்வு சிகிச்சை மையங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விதிகளுக்கு புறம்பாக குட்கா, பான் மசாலா விற்ற 3,063 கடைகளுக்கு எச்சரிக்கை விடப்பட்டு 21 கடைகள் சீல் வைக்கப்பட்டு உள்ளன. மாநில எல்லைகளிலும் சோதனை நடத்தி கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டை போதை பொருட்கள் இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்பதில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் முனைப்புடன் இருக்கிறார். மேலும் 100% போதை பொருட்கள் இல்லாத மாநிலமாக இருக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்" என்று அவர் தெரிவித்தார்.

# தருமபுரியில் சட்டவிரோத கருக்கலைப்பு செவிலியர் உட்பட 7 பேர் கைது

தருமபுரி மே:30-

தருமபுரி மாவட்டத்தில் சட்ட விரோதமாக கருக்கலைப்பு செய்து வந்த செவிலியர் மற்றும் இடைத்தரகர்கள் உட்பட 7 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.



தருமபுரி அடுத்த செட்டிக்கரை பகுதியில் கருத்தரித்த பெண்களின் கருவில் உள்ள சிசுக்களின் பாலினத்தை கண்டறிந்து, கருக்கலைப்பு செய்வதாக மாவட்ட மருத்துவத்துறை ஊரகப் பணிகள் இணை இயக்குனர் கனிமொழிக்கு ரகசியதகவல் கிடைத்துள்ளது. இதைத் தொடர்ந்து, காவல் துறையினர் உதவியுடன் செட்டிக்கரை பகுதியில் தீவிரமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது திருப்பத்தூர் பகுதியைச் சேர்ந்த ஜோதி (33) சதீஷ்குமார்(37), சுதாகர்(37), தருமபுரியை சேர்ந்த கற்பகம் (38) ஆகியோர் எந்த மருத்துவப் படிப்பும் படிக்காமல் கருவுற்ற பெண்களின் சிசுவின் பாலினத்தை கண்டறிந்து, பெண் சிசுக்கள் இருந்தால் அவற்றை கருக்கலைப்பு செய்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் இதற்கு உடந்தையாக இடைத்தரகர்கள் சரிதா(40), குமார்(38), ஆட்டோ டிரைவர் வெங்கடேசன் (33) இருந்ததும் தெரியவந்தது. இதையடுத்து, அவர்கள் 7 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

### மணப்பாறை-மதுரை சாலையில் உள்ள

# தனியார் மதுக்கடையை வேறு இடத்திற்கு மாற்ற வட்டாட்சியரிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

மணப்பாறை மே.30-

மணப்பாறை வட்டாட்சியர்யிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகரகுழு சார்பில் நகர செயலாளர் ஜனசக்தி உசேன், நிர்வாககுழு உறுப்பினர்கள் சுப்பிரமணியன், சௌக்கத் அலி, நல்லுச்சாமி ஆகியோர் மணப்பாறை மதுரை சாலையில் உள்ள தனியார் மதுக்கடையை வேறு இடத்திற்கு மாற்ற கோரி மனு. கொடுத்தனர்



அம்மனுவில் மணப்பாறை-மதுரை சாலையில் உள்ள தனியார் மதுக்கடையை அருகில் அரசு ஆண்கள்,பெண்கள் மேல் நிலைப் பள்ளியும் தனியார் கேட்டரிங் கல்லூரியும் இயங்கி வருகிறது. டி.எஸ்.பி மற்றும் தீயணைப்பு நிலைய அலுவலகத்திற்கு செல்லும் பாதை அருகில் மதுக்கடை உள்ளது.

எதிர்ப்புறம் கல்லாத்துப்பட்டி, பூமாலைபட்டி பிரதான சாலை அமைந்துள்ளது. மேலும் அருகில் இலட்சுமி நாராயண நகர் இவ்விரு பகுதிகளிலிருந்தும் மதுக்கடை உள்ள பகுதியை கடந்து செல்ல வேண்டியுள்ளது. மேலும் மதுக்கடை சாலையின் ஓரத்தில் உள்தால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகிறது.

இந்த மதுக்கடை துவங்கும்போதே இங்கு துவங்க கூடாது என பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். கடந்த அரசு எதிர்ப்புகளை கடந்து இந்த இடத்தில் மதுக்கடையை துவங்கியது.

தொடங்கிய நாளிலிருந்து இன்று வரை விபத்துகள் ஏற்பட்டு வருகிறது. தமிழக அரசு உடனடியாக இந்த மதுக்கடையை வேறு இடத்திற்குமாற்றவேண்டும் என்று கூறியுள்ளனர்.

# திண்டுக்கல்லில் ரூ.1.5 லட்சம் கேட்டு கடத்தப்பட்ட மருத்துவரை போலீஸ் உதவியோடு சாமர்த்தியமாக மீட்ட மகன்

திண்டுக்கல் மே.30-

திண்டுக்கல்லில் ரூ. 1.5 லட்சம் பணம் கேட்டு சித்த மருத்துவரை கடத்திய 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 2 பேருக்கு போலீசாரின் தேடுதலுக்கு உட்பட்டுள்ளனர்.

இலங்கையை சேர்ந்தவர் யோகநாதன் (65). இவர் கடந்த ஐம்பது வருடங்களுக்கு முன்பு இலங்கையில் இருந்து அகதியாக தமிழகம் வந்திருக்கிறார். பின்னர் இந்திய பிரஜையாக மாறி சித்த மருத்துவம் படித்து திருச்சியில் சித்த மருத்துவராக இருந்து வருகிறார். மேலும் யூடியூப் மூலமாக சித்த வைத்தியம் தொடர்பான ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இந்நிலையில் விருத்தாசலத்தைச் சேர்ந்த சசிதரன் என்பவர், தனது தாத்தா திண்டுக்கல் மாவட்டம், அய்யம்பாளையம் அருகே உள்ள சித்தரேவில் உடல்நிலை பாதிக்கப்பட்டு உள்ளார் என்று மருத்துவர் யோகநாதனிடம் கூறி அவரை நேரில் பார்த்து சிகிச்சை அளிக்குமாறு கேட்டுள்ளார். இதனையடுத்து கடந்த 26ம் தேதி பேருந்து மூலம் திண்டுக்கல் சென்றுள்ளார் யோகநாதன். அங்கு சசிதரன் மற்றும் அவர் நண்பர்கள் இணைந்து, யோகநாதனை அய்யம்பாளையம் அருகே உள்ள தனது தோட்டத்து வீட்டிற்கு காரில் அழைத்துச் சென்றுள்ளனர்.

பின்னர் அவரை ஒரு அறையில் அடைத்து வைத்து பணம் கேட்டு மிரட்டி உள்ளனர். சசீதரன் மற்றும் 6 பேர் சேர்ந்த அந்தக் கும்பல், யோகநாதன் வைத்திருந்த ஏடிஎம் கார்டை வாங்கி அதிலிருந்து ரூ 25,000 எடுத்துள்ளனர். மேலும் அவரது செல்போன் மூலம் இலங்கையில் உள்ள அவரது மகன் மற்றும் திருச்சியில் உள்ள வளர்ப்பு மகன் விஜயகுமார் ஆகியோரிடம் செல்போன் மூலம் தொடர்பு கொள்ள வைத்து தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும் உடனடியாக பணம் ஒன்றரை லட்சம் பணம் அவசரமாக வேண்டும் என கேட்க வைத்திருக்கின்றனர்.



ஆனால் தந்தை பதட்டமாக பேசியதை அறிந்த அவருடைய வளர்ப்பு மகன், திருச்சியிலுள்ள வீட்டிற்குச் சென்று விசாரித்துள்ளார். அப்போது அவர் திண்டுக்கல்லுக்கு ஒருவருக்கு சிகிச்சை அளிக்க சென்றது தெரியவந்திருக்கிறது.

இதனால் ஏதோ விபரீதம் நடந்ததை அறிந்த விஜயகுமார், திண்டுக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்துள்ளார். இதனையடுத்து உடனடியாக சுதாரித்துக்கொண்ட காவல்துறையினர் துரிதமாக செயல்பட்டு தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை கண்காணிக்க ஆரம்பித்துள்ளனர். இதனிடையே மீண்டும் கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் விஜயகுமாரிடம் செல்போன் மூலம் தொடர்பு கொண்டிருக்கின்றனர். 'பணம் தயாராக உள்ளது. எங்கு வரவேண்டும்?' என இயல்பாக கேட்டுள்ளனர். அப்பொழுது கடத்தல் கும்பலைச் சேர்ந்த சசிதரன், பணத்துடன் செம்பட்டி அருகே வருமாறு கூறியுள்ளார். இதனையடுத்து போலீசார் மற்றும் விஜயகுமார் ஆகியோர் சசிதரன் சொன்ன இடத்திற்கு சென்றுள்ளனர். அங்கு மறைந்திருந்த காவல்துறையினர், சம்பவ இடத்திற்கு வந்த சசிதரனை கைது செய்தனர்.

இதனிடையே சசிதரன் கைது செய்யப்பட்ட தகவல் அறிந்ததும் கடத்தல் கும்பலை சேர்ந்த கேசி பட்டியைச் சேர்ந்த மணிகண்டன், திருப்பூரைச் சேர்ந்த கோபி , நாகப்பட்டினத்தை சேர்ந்த நாகராஜ் மற்றும் அய்யம்பாளையத்தைச் சேர்ந்த ஜெயராமன் ஆகியோர் அங்கிருந்து தப்பி ஓட முயன்றுள்ளனர். அவர்களையும் தனிப்படை போலீசார் கைது செய்தனர். இதனிடையே கடத்தல்காரர்களிடம் இருந்து தப்பிய யோகநாதன், பொதுமக்கள் உதவியுடன் திண்டுக்கல் தெற்கு காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து காவல்துறையினர் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் இந்தக் கடத்தல் கும்பலுக்கு தலைவனாக செயல்பட்ட சித்தரேவு சேர்ந்த மணி மற்றும் விமல் ஆகியோரை போலீசார் தேடி வருகின்றனர். காவல்துறையினரின் துரித நடவடிக்கையின் பேரில் கடத்தப்பட்ட நபர் பத்திரமாக மீட்கப்பட்டார். மேலும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சீர்காழி அருகே சாலையோரம் குப்பைகளை கொட்டும் ஊராட்சி நிர்வாகத்தை கண்டித்து வாலிபர்கள் நூதன போராட்டம்



சீர்காழி, மே.30–

சீர்காழி அருகே நவகிரக ஸ்தலமான புதன் கோவில் செல்லும் சாலையோரம் குப்பைகளை கொட்டும் ஊராட்சி நிர்வாகத்தை கண்டித்து கண்களில் கருப்பு துணி கட்டி கிராமத்து வாலிபர்கள் நூதன போராட்டம், மாவட்ட ஆட்சியர் விரைந்து நடவடிக்கை எடுக்க கோரிக்கை.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகேகீழசட்டநாதபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட இடத்தில் சீர்காழி பூம்புகார் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சாலையோரம் திருவெண்காடு, மங்கைமடம் ஆகிய இரண்டு ஊராட்சிகளின் குப்பைகள், கோழி இறைச்சி கழிவுகள், காலாவதியான மருந்து பொருட்களை ஆகியவற்றை கொட்டி செல்வதால் அந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள், பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் முகம் சுளிக்கும் வகையில் துர்நாற்றம் வீசுவதால் அந்த சாலையை கடந்து செல்ல முடியாமல் தவித்து வருகின்றனர்.

மேலும் நவக்கிரக தலமான புதன் கோவில் குப்பை கொட்டும் இடத்திற்கும் அருகிலேயே இருப்பதால் அங்கு சாமி கும்பிட வரும் பக்தர்கள் துர்நாற்றத்துடன் சாலையை கடந்து செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது மேலும் இந்த குப்பைகளை கொட்டுவதால் அதனை சுற்றி உள்ள விவசாய நிலங்களில் குப்பைகள் பறந்து சென்று விளைநிலங்களில் கிடப்பதால் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகளும் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

அதனால் சாலையோரம் குப்பைகளை கொட்டுவதை நிறுத்த கோரி பலமுறை ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் ஆத்திரமடைந்த கிராமத்து வாலிபர்கள் கண்களில் கருப்பு துணியை கட்டி நூதன முறையில் சாலையோரம் குப்பை கொட்டுவதை நிறுத்த கோரி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் உடனடியாக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இந்த குப்பை கொட்டும் இடத்தை மாற்றி பொதுமக்கள் செல்வதற்கு ஏதுவாக துர்நாற்றம் இல்லாமல் செல்ல விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராமத்து வாலிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com

## மாநிலங்களவை தேர்தல்

# பாஜக சார்பில் நிர்மலா சீதாராமன் உள்பட 16 வேட்பாளர்கள் அறிவிப்பு

புதுடெல்லி, மே.30–

நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் மீண்டும் கர்நாடகாவில் இருந்து எம்.பியாக தேர்வு செய்யப்பட உள்ளார்.

தமிழகம், கர்நாடகா உள்பட 15 மாநிலங்களில் இருந்து 57 மாநிலங்களவை எம்.பி.க்களின் பதவிக்காலம் முடிவுக்கு வருவதை அடுத்து அந்த இடங்களுக்கு அடுத்த மாதம் 10ல் தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில், ஜூன் 10-ம் தேதி நடைபெற உள்ள மாநிலங்களவை தேர்தலுக்காக மொத்தம் 16 பேர் கொண்ட வேட்பாளர்கள் பட்டியலை பா.ஜ.க. நேற்று வெளியிட்டுள்ளது.



இதில் மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் மீண்டும் கர்நாடகாவில் இருந்து எம்.பியாக தேர்வு செய்யப்பட உள்ளார்.

மகாராஷ்டிராவில் இருந்து மாநிலங்களவை உறுப்பினராகிறார் மத்திய மந்திரி பியூஷ் கோயல்.

தஷ்னா சிங் உத்தர பிரதேசத்தில் இருந்து மாநிலங்களவை எம்.பியாக தேர்வு செய்யப்பட உள்ளார்.

## மதுரையில் 16 வயது பள்ளி மாணவியை

# பாலியல் வன்கொடுமை செய்து கர்ப்பமாக்கிய 60 வயது முதியவர் போக்சோவில் கைது

மதுரை மே.30–

மதுரையில் 16 வயது பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்து கர்ப்பமாக்கிய 60 வயது முதியவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

மதுரை மாவட்டம், சோழவந்தான் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவர் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 9ஆம் வகுப்பு படித்து வருகிறார். இந்நிலையில் சிறுமி வசிக்கும் வீட்டிற்கு அருகே 60 வயதான முதியவர் ராசு தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். சிறுமியின் குடும்பத்தினர் கூலி வேலை செய்வதால் பள்ளி மாணவி வீட்டில் தனியாக இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் பள்ளி மாணவி தனியாக



இருப்பதை முதியவர் ராசு தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு நாளடைவில் சிறுமியை கட்டாயப்படுத்தி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

ஒரு கட்டத்தில் உடல்நலக்குறைவால் கடுமையாக பாதிக்கப்பட்ட 16 வயது மகளை பெற்றோர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். அங்கு சிறுமியை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் கர்ப்பமாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். 16 வயது சிறுமி கர்ப்பமாக இருப்பது குறித்து குழந்தைகள் நலக்குழு மற்றும் சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு மருத்துவர்கள் தகவல் கொடுத்ததின் பேரில் சிறுமியிடம் விசாரணை நடத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து சிறுமி மற்றும் அவரது பெற்றோர் அளித்த புகாரின் பேரில் சிறுமியை பலமாதங்களாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய முதியவர் ராசுவை காவல்துறையினர் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அமைச்சர் சந்திரபிரியங்கா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்தார்



காரைக்கால், மே- 30;

காரைக்கால் மாவட்டத்தில் கடந்த 27-ஆம் தேதி காரைக்கால்மேட்டில் அமைந்துள்ள சுனாமி குடியிருப்பில் குடிநீரில், கழிவு நீர் கலந்து அதன் காரணமாக முதியவர்கள் மற்றும் குழந்தைகள் பாதிக்கப்பட்டு அரசு பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் அரசுமுறைப் பயணமாக வெளியூர் சென்றிருந்த பாண்டிச்சேரி போக்குவரத்து துறை அமைச்சர் சந்திரபிரியங்கா அரசு பொதுமருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அப்பொழுது சிகிச்சை பெற்று வருபவர்களிடம் அமைச்சர் கூறுகையில் இது போன்ற நிகழ்வு எதிர்காலத்தில் ஏற்படாத வண்ணம் கவனமாக இருக்க அதிகாரிகளிடம் கூறியுள்ளேன். நீங்கள் இனிமேல் குடிநீரை கொதிக்க வைத்து குடிக்கவேண்டும். மேலும் தங்கள் பகுதிகளில் ஏதேனும் சிறிய குறைகள் இருந்தால் உடனடியாக ஆட்சியரிடமோ அல்லது மாவட்ட துணை ஆட்சியரிடமோ அல்லது என்னிடமோ உடனடியாக தகவல் தெரிவிக்கலாம் அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

இதில், காரைக்கால் துணை மாவட்ட ஆட்சியர் எம்.ஆதர்ஷ், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சுப்ரமணியம் மற்றும் அரசு அதிகாரிகள், காரைக்கால் மாவட்டத்தை சார்ந்த முக்கியபிரமுகர்கள், அரசு பொது மருத்துவமனை மருத்துவர்கள் பலர் உடன் இருந்தார்கள்.

# தர்மபுரம் ஆதீனம் ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் செல்வமுத்து குமாரசாமிக்கு அபிஷேகம்

சீர்காழி, மே. 30–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் தருமபுரம் ஆதீனத்திற்குசொந்தமான வைத்தியநாதசுவாமி, தையல்நாயகி அம்மன், விநாயகர், செல்வ முத்துக்குமாரசாமி, அங்காரகன் (செவ்வாய்)தன்வந்திரி ஆகிய தனி சன்னதி கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றனர்.



இந்த கோவிலுக்கு தினமும் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து ஏராளமானோர் நேரில் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இந்நிலையில்செல்வமுத்து குமாரசாமிக்கு கார்த்திகை தோறும் சிறப்பு வழிபாடு நடைபெறும் வழக்கம். அதன்படி நேற்று தர்மபுரம் ஆதீனம் ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் செல்வமுத்து குமாரசாமிக்கு பால், இளநீர், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களால் அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் செய்திருந்தனர்

# திருவிழாவில் பானிபூரி சாப்பிட்ட 97 குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதி

மன்டலா, மே.30–

மத்தியப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற பானி பூரி திருவிழாவில் பானி பூரி சாப்பிட்ட 97 குழந்தைகளுக்கு உடல் நலக்குறை ஏற்பட்டுள்ளது.

மத்திய பிரதேசத்தில் உள்ள மன்டலா மாவட்டத்தில் சிங்கார்பூர் என்ற பகுதி உள்ளது. பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியான இங்கு நேற்று பானி பூரி திருவிழா நடத்தப்பட்டது. இதில் அக்கம்பக்கம் உள்ள கிராமங்களில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்று பானி பூரி சாப்பிட்டுள்ளனர். இந்நிலையில், பானி பூரி விழாவில் சாப்பிட்ட பல்வேறு குழந்தைகளுக்கு நேற்று மாலை உடல் நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பல குழந்தைகளுக்கும் வாந்தி, வயிற்று வலி ஏற்பட்ட நிலையில், ஃபுட் பாய்சன் ஏற்பட்டது கண்டறியப்பட்டது. மொத்தம் 97 குழந்தைகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், இவர்கள் அனைவரும் ஒரே பானி பூரி கடையில் பானி பூரி சாப்பிட்டது தெரியவந்துள்ளது. உடனடியாக சம்பந்தப்பட்ட பானி பூரி கடைக்கு விரைந்த காவல்துறையினர் அந்த கடையில் இருந்த பொருள்களை பறிமுதல் செய்து பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர்.

அத்துடன் அந்த பானி பூரி கடை உரிமையாளரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். இந்நிலையில் மத்திய அமைச்சரும் அப்பகுதியின் எம்பியுமான பக்கன் சிங் குலாட்சே பாதிக்கப்பட்ட குழந்தைகளை மருத்துவமனைக்கு நேரில் சென்று நலம் விசாரித்தார். இது தொடர்பாக மருத்துவர் ஷாக்யா கூறுகையில், 97 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு சில குழந்தைகளைத் தவிர மற்றவர்களுக்கு லேசான பாதிப்பே ஏற்பட்டுள்ளது. அனைவரும் ஆபத்தான கட்டத்தை தாண்டிவிட்டனர். எனவே யார் உயிருக்கும் ஆபத்து இல்லை என்றார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கேரளாவில் ஒரு கடையில் ஷவர்மா சாப்பிட்ட பலருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதில் ஒரு இளம்பெண் உயிரிழந்த நிலையில், அந்த கடைக்கு சீல் வைக்கப்பட்டு பல இடங்களில் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் ரெய்டு நடத்தி உணவின் தரத்தை ஆய்வு செய்தனர்.

# வழக்கம்போல் பயன்படுத்தலாம்... ஆதார் அறிவுறுத்தலை திரும்ப பெற்றது மத்திய அரசு

புதுடெல்லி மே.30–

ஆதார் கார்டு நகலை சமர்ப்பிப்பதற்கு பதிவாக, ஆதார் எண்ணின் கடைசி 4 இலக்கங்களை மட்டும் காட்டும் 'மாஸ்க் ஆதார் கார்டை' பயன்படுத்தலாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆதார் கார்டு நகல் தவறாக பயன்படுத்தப்படலாம் என்பதால், ஆதார் ஆணையத்தின் அங்கீகாரம் பெறாத நிறுவனங்களிடம் ஆதார் நகலை வழங்க வேண்டாம் என பொதுமக்களுக்கு மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் புதிய அறிவுறுத்தலை வழங்கியிருந்தது.

"ஓட்டல்கள் அல்லது திரையரங்குகள் போன்ற உரிமம் பெறாத தனியார் நிறுவனங்கள், பொதுமக்களிடம் இருந்து ஆதார் கார்டுகளின் நகல்களை சேகரிக்கவோ வைத்திருக்கவோ அனுமதி இல்லை. எனவே, தனியார் நிறுவனம் உங்களின் ஆதார் கார்டை பார்க்க வேண்டும் என்று கூறினாலோ, அல்லது உங்கள் ஆதார் கார்டு நகலைப் பெற விரும்பினாலோ, ஆதார் ஆணையத்திடம் இருந்து சரியான உரிமம் உள்ளதா என்பதைச் சரிபார்க்கவேண்டும்.

பிரவுசிங் சென்டர்கள் போன்ற பொது மையங்களல் இ-ஆதார் டவுன்லோடு செய்வதை தவிர்க்கவேண்டும். அப்படியே டவுன்லோடு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால், தேவையான நகல் எடுத்ததும், கம்ப்யூட்டரில் டவுன்லோடு செய்ததை நகலை நிரந்தரமாக டெலிட் செய்துவிடவேண்டும். ஆதார் கார்டு நகலை சமர்ப்பிப்பதற்கு பதிவாக, ஆதார் எண்ணின் கடைசி 4 இலக்கங்களை மட்டும் காட்டும் 'மாஸ்க் ஆதார் கார்டை' பயன்படுத்தலாம்" என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த செய்தி இன்று சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவிய நிலையில், தகவல் திருட்டு தொடர்பாக மக்களிடையே பீதியை ஏற்படுத்தியது. பொதுமக்கள் தரப்பில் இருந்து பல்வேறு கேள்விகளும் சந்தேகங்களும் முன்வைக்கப்பட்டன. டுவிட்டரில் ஆதார் ஹேஷ்டேக் டிரெண்ட் ஆனது. ஏற்கனவே ஆதார் நகலை பல இடங்களில் கொடுத்துள்ள நிலையில், இப்போது இப்படி சொல்கிறார்களே, என பலர் கூறி உள்ளனர்.

இதனையடுத்து, மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து வெளியிட்ட செய்திக்குறிப்பை மத்திய அரசு திரும்ப பெற்றது.

ஆதார் ஆணையத்தின் பெங்களூரு பிராந்திய அலுவலகம் வெளியிட்ட செய்தியின் அடிப்படையில் சுற்றறிக்கை அனுப்பப்பட்டதாகவும், இந்த சுற்றறிக்கையின் மூலம் தவறான புரிதலுக்கும், தவறாக விளக்கம் அளிக்கப்படவும் வாய்ப்பு உள்ளதால் உடனடியாக திரும்பப் பெறுவதாகவும் மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆதார் கார்டு வைத்திருப்பவர்கள் வழக்கம்போல் (சாதாரண எச்சரிக்கையுடன்) பயன்படுத்தலாம் எனவும் கூறி உள்ளது.



▶ தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூடுதல் என்.ஓ.சுகபுத்ரா, அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உடன் உள்ளனர்.

# கடலூர் அருகே காரும் பைக்கும் நேருக்கு நேர் மோதியதில் 2 பேர் பலி

கடலூர் மே.30–

கடலூர் அருகே காரும் பைக்கும் நேருக்கு நேர் மோதியதில் இரண்டு பேர் பலியான நிலையில், ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்தவர் அங்கான் மகன் பெரியசாமி (40). இவர் தனது இரண்டு சக்கர வாகனத்தில் கடலூர், ராமநத்தம் அருகே உள்ள நாங்கூருக்கு துக்க நிகழ்வுக்காக சென்றார். இவருடன் உறவினர்களான பதினெட்டான் மகன் வேலு (70) மற்றும் பழனிமுத்து மகன் வேலு (37) ஆகிய இருவரும் சென்றனர்.

அப்போது எதிரே கொரக்கவாடியைச் சேர்ந்த ரெங்கசாமி மகன் கிருஷ்ணமூர்த்தி (31) என்பவர் காரில் வந்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக பைக்கும் காரும் மோதியதில் 3 பேரும் தூக்கி வீசப்பட்டனர். இதில் பெரியசாமியும், பதினெட்டான் மகன் வேலுவும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதுகுறித்து தகவலறிந்த போலீசார் இருவருடைய உடலையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். படுகாயமடைந்த பழனிமுத்து மகன் வேலு சிகிச்சைக்காக திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இதில் காரில் வந்த கிருஷ்ணமூர்த்தி என்பவர் தப்பி ஓடிய நிலையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தனிநபர் முயற்சியால் பழமையான பாதை மீட்டெடுப்பு

தி.மலை மே.30–

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் பிஞ்சூர் ஊராட்சிக்கு உட்பட்ட காந்திபுரம் பகுதியைச் சேர்ந்த முருகதாஸ் மகன் அசோக் குமார் என்பவருக்கு சொந்தமான சுமார் 2 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்து வருகிறார். இவருக்கு பக்கத்து நிலத்தில் உள்ளவர்கள் யாவரும் அத்தியாவசியத்திற்கும் ,உழவு பணிக்கு கூட வழிவிட மறுத்து வந்துள்ளனர். ஊரில் உள்ள பெரியவர்களின் சார்பாக நிலத்திற்கு செல்ல வழியினை கேட்டுள்ளார்.

இதற்கு பக்கத்து நிலத்தின் உரிமையாளர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர். உடனே மு.அசோக் குமார் என்பவர் இந்த நிலத்தின் பழைய வரைபடத்தின் மூலம் பழைய பாதை உள்ளதை கண்டறிந்தார். இதனை மீட்டுத் தரக்கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கின் முடிவில் அசோக் குமார் அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வந்ததை அடுத்து மாவட்ட ஆட்சியர் பா.முருகேஷ் இடம்



மனுக்கள் அளித்துள்ளார். இந்த மனுவின் மீது உள்ள குறைகளை உடனடியாக செய்து முடிக்க வேண்டுமென மாவட்ட கலெக்டர் செங்கம் வட்டாட்சியர் மற்றும் செங்கம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திடம் உத்தரவிடப்பட்டது.

அதனடிப்படையில் பாய்ச்சல் (பிறுக்கா) ஆர்.ஐ., 8 கிராம நிர்வாகிகள், பிஞ்சூர் ஊராட்சி மற்றும் காவல்துறையின் உதவியுடன் சம்பந்தப்பட்ட இடத்திற்கு சென்று உரிய ஆவணத்துடன் பழைய வரைபடத்தில் உள்ள பாதை சுமார் 2 கிலோமீட்டர் தூரம் மீட்டெடுத்தனர். அப்பொழுது செங்கம் வட்டாட்சியர் முனுசாமி, பாய்ச்சல் வருவாய் ஆய்வாளர். அமுதா, செங்கம் காவல்துறை இன்ஸ்பெக்டர் லோ.யோகராஜ்,மு.மலர், காவலர்கள் ஆ.சந்தியா,நா. தங்கம், பிஞ்சூர் ஊராட்சிக்கு உட்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அண்ணாமலை, கரியமங்கலம் கிராம நிர்வாக அலுவலர் சந்திரகுமார், ரமேஷ் செங்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலர் தனஞ்செழியன், பிஞ்சூர் ஊராட்சி செயலாளர் பெ.சுப்பிரமணி, 8 கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள் சண்முகம், இந்திரா, பிஞ்சூர் ஊராட்சியில் உள்ள தூய்மைப் பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் நடைபெற்ற வைகாசி மாத கார்த்திகையையொட்டி சிறப்பு வழிபாடு



புதுக்கோட்டை, மே.30-
புதுக்கோட்டை மேலராஜ வீதியிலுள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் மாசி மாத கார்த்திகை, சஷ்டியை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. வைகாசி மாத கார்த்திகையையொட்டி, காலையில் தண்டாயுதபாணி சுவாமிக்கும், விநாயகருக்கும் பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடந்தது.

மாலையில் தண்டாயுதபாணி சுவாமி சந்தனக்காப்பு மலர் அலங்காரத்திலும், விநாயகர் வெள்ளிக் கவச அலங்காரத்திலும் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் வந்திருந்து வழிபட்டனர். ஏற்பாடுகளை பாலு அய்யர் மற்றும் கோயில் ஊழியர்கள் செய்திருந்தனர்.




# சென்னை மதுரவாயல் அருகே லாரி சக்கரத்தில் சிக்கி வியாபாரி பலி

சென்னை மே.30-
மாங்காடு அருகே லாரி சக்கரத்தில் சிக்கி வியாபாரி பலியானார்.

மதுரவாயல் அடுத்த ஜெயராம் நகர் பகுதியில் வசித்து வந்தவர் ஞானபிரகாஷ் (23). இவர், கோயம்பேடு மார்க்கெட்டில் கருவேப்பிலைவியாபாரம் செய்து வந்தார். இவரது நண்பர் அஜீத் (22). இவர்கள் 2 பேரும் நேற்று மதியம் மாங்காடு அடுத்தசிக்கராயபுரத்தில் உள்ள கல்குவாரியில் குளித்துவிட்டு, மது போதையில் மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தனர்.

மாங்காடு அருகே சென்ற போது நிலை தடுமாறி 2 பேரும் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்தனர். அப்போது பின்னால் வந்த டிப்பர் லாரி, ஞானபிரகாஷ் மீது ஏறி இறங்கியது. லாரி சக்கரத்தில் சிக்கிய அவர், சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அஜீத், லேசான காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இதுபற்றி பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய லாரி டிரைவரை தேடி வருகின்றனர்.

# திருவரங்குளம் அருகே திருக்கட்டளை பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சதய விழாவை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டு போட்டி



புதுக்கோட்டை, மே.30-
புதுக்கோட்டை மாவட்டம்திருவரங்குளம் அருகே உள்ள திருக்கட்டளை பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சதயவிழாவை முன்னிட்டு நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் மதுரை திருச்சி ராமநாதபுரம் சிவகங்கை திருப்பத்தூர் மணப்பாறை அன்னவாசல் புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கணக்கான முரட்டுக்காளைகள் கலந்து கொண்டன.

புதுக்கோட்டை மாவட்டகோட்டாட்சியர் தலைமையில் ஆலங்குடி தாசில்தார் செல்வநாயகி முன்னிலையில் வீரர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டு போட்டி தொடங்கி வைக்கப்பட்டது. போட்டியில் 700க்கும் மேற்பட்ட காளைகள் கலந்து கொண்டன, 200 மாடுபிடி வீரர்கள் கலந்து கொண்டு முரட்டு காளைகளை அடக்கினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழ்நாடு சுற்றுச்சூழல் இளைஞர் விளையாட்டு துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் காளைகளுக்கும் தங்கம் வெள்ளி காசுகள் மிக்ஸி உள்ளிட்ட பரிசுப் பொருட்களை வழங்கி பாராட்டினார். விழா ஏற்பாடுகளை திருக்கட்டளை பாலா குரூப்ஸ் பொதுமக்கள் இளைஞர்கள் செய்திருந்தனர். நிகழ்ச்சியில் திருச்சி திரைப்பட நடிகர் பரதன் வெற்றி பெற்ற காளைகளுக்கு பரிசுகளை வழங்கி பாதுகாப்பு ஏற்பாடுகளை வல்லத்ராகோட்டை போலீசார்செய்திருந்தனர். மாடுபிடி வீரர்களுக்கு மருத்துவ பரிசோதனை சுகாதாரத்துறை மூலம் செய்யப்பட்டது காளைகளுக்கு கால்நடை துறை சார்பில் பரிசோதனை செய்யப்பட்டது.

# புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தை புத்தாஸ் வீக்கலைகள் சிறுவர்கள், மாணவ, மாணவிகள் பார்வையிட்டு கண்டுகளித்தனர்



புதுக்கோட்டை மே.30
புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் பல்வேறு விதமான பறவைகள், விலங்கினங்கள், உள்ளிட்டவைகளும் பழங்கால முதுமக்கள் தாழிகளில் மன்னர்கள் உபயோகித்த ஆயுதங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் பள்ளிகள் கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால் மாணவர்கள்,பெரியவர்கள் குடும்பத்துடன் பார்வையிட்டு கண்டுகளித்துவருகின்றனர். இந்நிலயில் நேற்று புதுக்கோட்டை புத்தாஸ் வீரகலைகள் சிறுவர்கள், மாணவ, மாணவிகள் அருங்காட்சியகத்தை பார்வையிட்டு கண்டுகளித்தனர்.

அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரியவகைவிலங்கினங்கள் பறவைகள் ஆகியவற்றையும் கண்டு ரசித்தனர். மேலும் அருங்காட்சியகத்தில் 20 அடி நீளமும் 10 அடி உயரமும் கொண்ட டைனோசர் உருவ பொம்மை வைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் தொன்மை சிறப்புமிக்க பல சேகரிப்புகள் சித்தன்னவாசல், குடுமியான்மலை, நார்த்தாமலை, திருமயம் கோட்டை, மற்றும் இலுப்பைக்குடி அய்யனார் கோவில் போன்ற இடங்களிலிருந்து பெறப்பட்ட அரிய வகை பொருட்களை புத்தாஸ் வீரக்கலைகள் சிறுவர்கள், மாணவ, மாணவிகள் பார்வையிட்டு கண்டுகளித்தனர்.

## திருநாவலூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு

# சிறந்த புலனாய்வுக்கான விருது தமிழக முதல்வர் வழங்கினார்



கள்ளக்குறிச்சி, மே,30_
கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை உட்கோட்டத்திற்கு உட்பட்ட திருநாவலூர் காவல் நிலைய ஆய்வாளர் சீனிவாசன் தலைமையில் கடந்த 11/2 ஆண்டுகளுக்கு முன்பு கூட்டுக்கொள்ளை வழக்கில் சிறந்த முறையில் புலனாய்வு மேற்கொண்டு, நூதன முறையில் குற்றவாளிகளை கண்டுபிடித்துகைதுசெய்து நடவடிக்கைஎடுத்ததற்காக , தமிழகத்திலேயே சிறந்த புலனாய்வு விருதினை தமிழக காவல்துறையின் தலைவர் சைலேந்திரபாபு பரிந்துரையின் பேரில், சிறந்த புலனாய்வு விருதினை தமிழக முதல்வர் 8கிராம்தங்கமும், ரூபாய் 25 ஆயிரத்திற்கான காசோலையும், பாராட்டு சான்றிதழும் வழங்கி பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

வடக்கு மண்டலத்திலயே சிறந்த புலனாய்வு விருது பெற்ற காவல் ஆய்வாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். திருநாவலூர் காவல் நிலையத்திற்கும், உளுந்தூர்பேட்டை உட்கோட்டத்திற்கும் பெருமை சேர்த்து, சிறந்த புலனாய்வு விருது பெற்ற காவல் ஆய்வாளர் சீனிவாசனின் பணிகள் மேலும்சிறக்க சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் காவல் துறையை சேர்ந்தவர்களும் சமூக வலைதளங்கள் மூலமாகவும், நேரடியாகவும் தங்களது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர். மேலும்,வரலாறு நாளிதழ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

# ஆப்பிரிக்க நாட்டில் கிராமத்துக்குள் புகுந்து பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 50 பேர் பலி

**புர்கினாபாசோ மே.30-**
ஆப்பிரிக்க நாட்டில், கிராமத்துக்குள் புகுந்து பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 50 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான புர்கினா பாசோவில் கடந்த 2015-ம் ஆண்டு முதல் பல்வேறு பயங்கரவாத குழுக்கள் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இவர்களின் கொட்டத்தை ஒடுக்க முடியாமல் அந்நாட்டு ராணுவம்திணறிவருகிறது. இந்த நிலையில் புர்கினா பாசோவின் கிழக்கு பகுதியில் கோம்பிங்கா மாகாணத்தின் மட்ஜோரி நகரில் உள்ள ஒரு கிராமத்துக்குள் நள்ளிரவில் புகுந்த பயங்கரவாதிகள் அங்கிருந்த வீடுகள் அனைத்தையும் சூறையாடினர். பின்னர் கண்ணில் பட்டவர்களை எல்லாம் துப்பாக்கியால் சுட்டும், கத்தி உள்ளிட்ட கூர்மையான ஆயுதங்களால் வெட்டியும் கொடூர தாக்குதல் நடத்தினர். பயங்கரவாதிகளின் இந்த கொலைவெறி தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள் உட்பட சுமார் 50 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# வாழ்க்கை என்பதே ஒரு பரீட்சை தான் மாணவர்கள் நீட்டை பார்த்து பயப்படக்கூடாது: அண்ணாமலை பேச்சு



நாமக்கல் மே.30
வாழ்க்கை என்பதே ஒரு பரீட்சை தான். மாணவர்கள் நீட் தேர்வை பார்த்துபயப்படக்கூடாது. ஒழுக்கம், மன உறுதி, கடின உழைப்பு, விடா முயற்சியோடு படித்தால் நிச்சயம் நல்ல மதிப்பெண் பெற முடியும் என நாமக்கல்லில் பாஜக தலைவர் அண்ணாமலை பேசியுள்ளார்.

நாமக்கல் நகர பாஜக மற்றும் தனியார் பள்ளி சார்பில் அரசு பள்ளி மாணவர்களுக்கு தனியார் பயிற்சி மையத்தின் சார்பில் இலவச நீட் பயிற்சி வகுப்புகளை பாஜக மாநில தலைவர் அண்ணாமலை நேற்று ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்குநீட் பயிற்சி கையேடுகளை வழங்கி மாணவர்களிடேயே பேசினார். அப்போது, இந்தவருடம்தமிழகத்திற்கு சாதனை வருடம். இந்தியாவில் 18 லட்சம் பேரும், தமிழகத்தில் 1.42 லட்சம் பேரும் நீட் தேர்வு எழுதுகின்றனர். தமிழகத்தில் இது கடந்தாண்டைகாட்டிலும் 30 ஆயிரம் அதிகம் என்றும், இந்தாண்டு முதன்முதலாக தமிழில் 31,300 பேர் நீட் தேர்வு எழுத உள்ளதாகவும், 7 ஆண்டுகளில் இவ்வளவு பேர் நீட் தேர்வு எழுதுவது மருத்துவ படிப்பிற்கு நீட் நம்பிக்கையை அதிகரித்துள்ளதை காட்டுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், நீட் வந்த பிறகுதான் ஒரே தேர்வு எழுதினால் அனைத்து மருத்துவக் கல்லூரியில் சேர முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும், நீட் வந்த பிறகுதான் மிகவும் பின்தங்கிய பகுதியில் இருக்கும் மாணவர்களும் மருத்துவ கல்லூரியில் சேர்ந்துள்ளதாகவும், நீட் மூலம் அனைவருக்கும் சம வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும், கடந்தாண்டு நீட் எழுதியதில் 58 சதவீதம் என்பது இந்திய அளவில் தேர்ச்சியில் முதலிடம் பிடித்துள்ளதாகவும், வாழ்க்கை என்பதே ஒரு பரீட்சைதான்.மாணவர்கள் நீட் தேர்வைப் பார்த்து பயப்படக்கூடாது.ஒழுக்கம், மன உறுதி, கடின உழைப்பு, விடாமுயற்சியுடன் படித்தால் நிச்சயம் நல்ல மதிப்பெண் பெற முடியும் என பேசினார்.

# ஆவடி அருகே திருமணமான 9 மாதத்தில் பெண் எடுத்த விபரீத முடிவு




சென்னை மே.30-
ஆவடி அருகே திருமணமான 9 மாதத்தில் புதுப்பெண் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆவடி அடுத்த திருமுல்லைவாயல், செந்தில் நகர் பிருந்தாவன் அவென்யூவில் வசிப்பவர் ஐயப்பன் (35). இவர் பிராட்வேயில் உள்ள பாத்திரக் கடையில் ஊழியராக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி தரண்யா (25). உறவினர்களான இவர்களுக்கு கடந்த 9 மாதத்திற்கு முன்பு திருமணம் நடைபெற்றது.

இந்நிலையில் ஐயப்பன் வேலைக்குச் சென்ற நிலையில், தனது மனைவி தரண்யாவை கைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார். ஆனால் அவர் கைபேசியை எடுத்து பேசவில்லை. இதனையடுத்து அவர் வீட்டு உரிமையாளர் ரஞ்சித்திற்கு போன் செய்து பார்க்குமாறு கூறியுள்ளளார். அவர் வந்து பார்த்தபோது தரண்யா தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் இருந்துள்ளார்.

இதையடுத்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த திருமுல்லைவாயல் போலீசார் சடலத்தை கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். புகாரின் அடிப்படையில் ஆவடி காவல் உதவி ஆணையர் புருஷோத்தமன் தலைமையிலான போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் தரண்யாவுக்கு திருமணமாகி9 மாதங்களே ஆவதால்திருவள்ளூர் ஆர். டி.ஓ விசாரணை நடத்தி வருகிறார்.

# ஆப்பிரிக்காவிலிருந்து கேரளாவுக்கு கடத்தி வந்த ரூ.20 கோடி மதிப்புள்ள ஹெராயின் பறிமுதல்




கேரளா மே.30-
ஆப்பிரிக்க நாட்டிலிருந்து கேரளாவுக்கு கடத்தி வந்த ஹெராயினை போலீசார் பறிமுதல் செய்து, ஒருவரை கைது செய்து உள்ளனர்.

ஆப்பிரிக்க நாட்டிலிருந்து கொச்சிக்கு போதை பொருள் கடத்தி வருவதாக கேரள வருவாய்த்துறை நுண்ணறிவு புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் போலீசார் மற்றும் வருவாய்த் துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது ஆப்பிரிக்க நாடான கேப்டவுன் நகரில் இருந்து வளைகுடா நாடுகள் வழியாக விமானத்தில் பயணம் செய்து வந்த முகமது அலி (46 ) என்ற நபரின் நடவடிக்கைகளில்சந்தேகம் ஏற்பட்டது. அந்த நபரை தடுத்து நிறுத்தி அவரது உடமைகளை அதிகாரிகள் சோதனையிட்டனர். அப்போது அவர் தனது கைப்பையில் ரகசிய அறை அமைத்து அதற்குள் நான்கு பாக்கெட்டுகளில் ஹெராயின் கடத்தி வந்தது தெரியவந்தது . பின்னர் அதனை பறிமுதல் செய்த அதிகாரிகள், அவரை கைது செய்தனர். இவர் வெளிநாட்டு போதை மருந்து கடத்தல் கும்பலின் முக்கிய காரணியாக இருக்கலாம் என்று புலனாய்வு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

மேலும், இந்த நபர் கொண்டுவந்தஹெராயின் எடை 2.887 கிராம் ஆகும். இதன் சந்தை மதிப்பு 20.18 கோடி ரூபாய் இருக்கலாம் என்று தெரிகிறது. இது அண்மையில் நடைபெற்ற மிகப்பெரிய அளவு உள்ள ஒரு போதை மருந்து கடத்தல் சம்பவமாக கருதப்படுகிறது . ஹெராயினை பறிமுதல் செய்த அதிகாரிகள் அவரை நெடும்பாசேரி பன்னாட்டு விமான நிலையகாவல்நிலையத்தில் ஒப்படைத்தனர். கைதான இவர் ஆலுவா முதல் வகுப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் ரிமாண்ட் செய்யப்பட்டார்.இவரிடம் மேல் விசாரணை நடைபெற்று வருகிறது.

# பல்லடம் அருகே கார்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 2 பேர் பலி



திருப்பூர் மே.30-
பல்லடம் அருகே கார்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இரண்டு பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

திருப்பூர் மாவட்டம், உடுமலையில் இருந்து ராஜேந்திரன் என்பவர் தனதுஉறவினர்கள்ஜெயந்தி, சுலோச்சனா ,சுசீலா, கமலா ஆகியோருடன் காரில் பல்லடத்திற்கு வந்து கொண்டிருந்தார். திருப்பூரில் இருந்து ரமேஷ் என்பவர் தனது 12 வயது மகன் கோகுலுடன் உடுமலைபேட்டைக்கு சென்றுகொண்டிருந்தார்.

அப்போது இருவரும் பல்லடம் அருகே புள்ளியப்பம்பாளையம் அருகேவந்தபோதுகார்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் சுசீலா, கமலா இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்த விபத்தினை பார்த்த அப்பகுதி பொதுமக்கள் காரின் இடிபாடுகளில் சிக்கி உயிருக்கு போராடி கொண்டிருந்தவர்களை மீட்டு பல்லடம் அரசு மருத்துவமனைக்கும், தனியார் மருத்துவமனைக்கும் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில்,ஜெயந்தி, சுலோச்சனா ஆகிய இருவரும் பல்லடம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிறுவன் கோகுல், ரமேஷ், ராஜேந்திரன் ஆகிய மூவருக்கும் முதலுதவி சிகிச்சை அளித்த பின் மேல் சிகிச்சைக்காக கோவையில்உள்ளதனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து பல்லடம் போலீசார் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

# ஆரணி அருகே காணாமல் போன பள்ளி மாணவி இரண்டு நாட்களுக்குப் பிறகு சடலமாக மீட்பு

திருவண்ணாமலை மே.30-
ஆரணி அருகேகடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு காணமல்போன 11 ஆம் வகுப்பு மாணவி நேற்று கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த அகரம் கிராமத்தைச் சேர்ந்தவர் கூலித்தொழிலாளி ரவி. இவரின் மனைவி பச்சையம்மாள். இவர்களுடைய மகள் ஹரிபிரியா (16) ஆரணி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படித்து வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த இரு தினங்களுக்கு முன்பு மகளை பெற்றோர் கண்டித்துள்ளனர். இதனால் கோபித்துக் கொண்டு வெளியே சென்றஹரிபிரியா. கடந்த இரண்டு தினங்களாக காணாததால் பல்வேறு இடங்களில் பெற்றோர் தேடியுள்ளனர்.

இதையடுத்து தனது மகள் ஹரிபிரியாவை கண்டு பிடித்து தருமாறு நேற்று முன்தினம், ஆரணி கிராமிய காவல் நிலையத்தில் ஹரிபிரியாவின் தந்தை ரவி புகார் கொடுத்துள்ளார். புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீசார், ஹரிபிரியாவை தேடி வந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று காலை ஆகாரம் கிராமத்தை ஒட்டிய வயல் வெளியிலுள்ள விவசாய கிணற்றில் ஹரிபிரியா சடலமாக தண்ணீரில் மிதந்துள்ளார். இதையடுத்து தகவல் அறிந்த ஹரிபிரியாவின் பெற்றோர் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை மேலே தூக்கியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து தகவலறிந்து சம்பவ இடத்திற்குசென்ற ஆரணி கிராமிய போலீசார் சடலத்தை கைப்பற்றி பிரேதபரிசோதனைக்காக ஆரணி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து ஹரிபிரியாவின் இறப்பு குறித்து வழக்குப் பதிந்து தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# மாணவர்கள் நீட்டை பார்த்து பயப்படக்கூடாது

# திருமணமான 9 மாதத்தில் புதுப்பெண் தற்கொலை





# பாடகர் சித்து மூஸ்வலா சுட்டுக்கொலை


| சென்னை / புதுக்கோட்டை | 30.05.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஒய். வி. ராவ் , தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர், நடிகர் (பி, 1903) (இ. 1973)



சுந்தர ராமசாமி , தமிழக எழுத்தாளர் (பி, 1931) (இ. 2005)



ஜக்மோகன் டால்மியா , இந்தியத் துடுப்பாட்ட நிருவாகி (பி, 1940) (இ. 2015)



வி. நாராயணசாமி , இந்திய அரசியல்வாதி, புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் (பி, 1947)



## இன்றைய நினைவு நாள்

என். எம். ஜோசி , இந்தியத் தொழிற்சங்கத் தலைவர் (பி.1875) (இ.1955)



பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் , தென்னிந்திய மிருதங்கக் கலைஞர் (பி.1912) (இ.1981)



டெட் டிரேக் , ஆங்கிலேயக் காற்பந்து வீரர் (பி.1912) (இ.1995)



ஜயலத் ஜயவர்தன , இலங்கை மருத்துவர், அரசியல்வாதி (பி.1953) (இ.2013)



புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள்

# நியமிக்கப்படவுள்ளனர்

**கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்**

**மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்**

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,

பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

தொடர்புக்கு: 04322 261577

**சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்**